**Vol:4 Issue 2 Nov.2020** **P.g No: 52 - 57**




ISSN : 2456-821X

***கட்டுரையாளர் :***

***மு.கயல்விழி,***
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த் துறை,*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி,*
*காஞ்சிபுரம்-631 502.*

shctpt.edu

## ***தலைப்பு : உதிரப்பட்டி, நெய்த்தோர் பட்டிகை, இரத்தக்காணி***

### ***முன்னுரை***

*தமிழ்ச் சமுதாயம் வீரத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயமாகும். தமிழர்கள் போரை விரும்பி ஏற்றப் பண்பாளர்களாவர். இவ்வகையான போரில் தோல்வியுற்றுத் திரும்புதலோ, புறமுதுகிட்டு ஓடுதலோ அவர்களிடத்து ஒருபோதும் இல்லை. இவ்வகையான மறவர் சார்ந்த வீரச் சமூகத்தை அரசர் முதல் அனைத்து நிலை மக்களும் மதித்துப் போற்றினர். போரில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட நிகழ்வுகளிலும் வீரத்துடனும் விவேகத்துடனும் செயல்பட்டு இன்னுயிர் நீத்த போர் மறவர் எண்ணிலடங்காதவர். அவர்களில் ஒரு சிலர் பற்றியே அறியக் கிடக்கின்றது. இவ்வாறு வீரத்துடன் இன்னுயிர் நீத்த மறவர்களுக்கு அக்காலச் சமூகம் அவர் தம் வீரத்தைப் பாராட்டி நடுகல்*

எழுப்பியது. மேலும் அவர்தம் மரணத்திற்குப் பரிசாக நிலங்களைத் தானமாக வழங்கிச் சிறப்பித்தது. இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களே உதிரப்பட்டி நிலங்களாகும். இது நெய்த்தோர்பட்டி, இரத்தக்காணி என்றும் அழைக்கப்பட்டது. தமிழர்களின் தனிச் சிறப்பான இவ்வகையான நிலங்கள் குறித்துப் பல கல்வெட்டுகள் பேசுகின்றன. அவ்வகையான நிலங்களையே இக்கட்டுரை ஆராய்கின்றது.

**நெய்த்தோர் பட்டிகை**

நெய்த்தோர் பட்டிகை என்பது பற்றிப் பழந்தமிழ் இலக்கியம் பேசுகின்றது. பெருங்காதையில் இது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அப்பாடல் வருமாறு:

"பரும் யானையெடு பாஞ்சால ராயனை
வெங்களத் தட்ட வென்றி யிவையென
நெய்த்தோர் பட்டிகை யாக வைத்துப்
பத்தூர் கொள்கெனப் பட்டிகை கொண்டது"
(வத்தவ காண்டம்-கொற்றங் கொண்டது: பா:10-13)

உதயணன் என்ற அரசன் பாஞ்சால மன்னனை வென்று பத்துக் கிராமங்களைப் போரில் வீரத்துடன் உயிர் நீத்தோருக்குத் தானமாக நெய்த்தோர் பட்டிகையாக வழங்கினான் என்று இப்பாடல் விவரிக்கின்றது. எனவே போரில் வீரமரணம் எய்துவோருக்கு அக்காலத்தில் இவ்வகை நிலங்கள் வழங்கப்பட்டன என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. போரைப் பற்றிப் பேசும் இப்பாடலில் நெய்த்தோர் பட்டிகை என்ற சொல் இடம் பெறுகின்றது. இதற்கு வேறு வகையில் பொருள் கூறும் ஆய்வாளர்கள் நெய்த்தோர் என்பதற்கு இரத்தம் என்றும் பட்டிகை என்பதற்குப் பத்திரிக்கை என்றும் பொருள் கொண்டனர். ஆனால் பட்டிகை என்பது பட்டி என்று பொருள் கொள்வதே சரியானதாகும். எனவே இச்சொல்லுக்கு உதிரப்பட்டி என்ற பொருளே சரியானதாகும். நெய்த்தோர் பட்டிகை பற்றிக் குறிப்பிடும் வேறு இலக்கியங்கள் இதுவரை கிடைத்தில. மேலும் இச்சொல் வழக்கொழிந்த சொல்லாக உள்ளது.

shcpt.edu

**உதிரப்பட்டி, இரத்தக்காணி**

உதிரப்பட்டி என்பது வீரத்துடன் போரிலோ அல்லது பொது நிகழ்விலோ இன்னுயிர் நீத்த வீரர்களைச் சிறப்பிக்க வழங்கப்பட்ட நிலங்களாகும். இரத்தக்காணி என்பது பொது நிகழ்ச்சிக்காக இரத்தம் சிந்தித் தன்னுயிர் ஈந்தவருக்கு வழங்கப்பட்ட காணி என்ற நிலமாகும். இவ்வகை நிலங்கள் காயம் பட்டவருக்கு வழங்கப்படாமல் இன்னுயிர் ஈந்தோருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. உதிரப்பட்டி என்ற சொல்லுக்கு விளக்கமளிக்கும் அளிக்கும் அகராதிகள்,

“அரசனுக்காகப் போர்க்களம் புகுந்து வெற்றி ஈட்டி வீரமரணம்
எய்திய வீரனுக்கு வழங்கப்பட்ட நிலம்”

என்றும்,

“போரில் பட்டவன் மகனுக்கு அல்லது மனைவிக்கு
கொடுக்கும் மானியம்”

என்றும் பொருள் உரைக்கின்றன. எனவே பண்டைய நாளில் போரில் அல்லது வீரநிகழ்வில் இரத்தம் சிந்தியவர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலம் என்பது இவை என்பது தெளிவாகின்றது. பொது நிகழ்விற்காக உதிரம் சிந்தியவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். இவ்வகை நிலம் தஞ்சை மாவட்டம் திருப்புறம்பியம் என்னும் ஊரில் இன்றும் உள்ள செய்தி இதை உறுதிப்படுத்தும். நெய்த்தோர் பட்டிகை என்ற சொல்லை இலக்கியங்களும் உதிரப்பட்டி என்ற சொல்லைக் கல்வெட்டுகளும் கையாண்டாலும் இவற்றின் பொருள் ஒன்றே. இத்துடன் இரத்தப்பட்டி என்ற சொல்லும் இதேப் பொருளில் கையாளப்படுகின்றது.

**உதிரப்பட்டி நிலப் பதிவுகள்**

தமிழ்நாடு முழுவதும் வீரமறவர்களுக்காக வழங்கப்பட்ட உதிரப்பட்டி நிலங்களைக் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. கால வெள்ளத்தில் அழிந்தது போக எஞ்சியுள்ள உதிரப்பட்டி நிலங்கள் பற்றிச் சான்றுரைக்கும் கல்வெட்டுச் செய்திகள் வருமாறு: விருதுநகர் மாவட்டம்

இராஜபாளையத்திற்கு அருகில் உள்ள கருங்குளம் என்ற ஊரில் உள்ள குளத்தின் கண்மாயை அடைக்கும் பணியில் உயிர் நீத்த பெருந்தேவப் பள்ளன் என்பவனுக்குக் கி.பி. 1302 இல் ஓர் வீரக்கல் எடுக்கப்பட்டதுடன் அவ்வூர் சபையினர் உதிரப்பட்டி நிலத்தையும் தானமாக வழங்கினர்.

விழுப்புரம் மாவட்டம் அரகண்ட நல்லூரில் தேவரடியாள் பொன்னாண்டை என்பவளின் மகன் இளவெண்மதி சூடினான் என்பவன் அவ்வூர் கோயில் மண்டபம் நீண்ட நாளாகக் கட்ட இயலாமல் இருப்பதைக் கண்டு மனம் வருந்தி அது கட்டி முடிக்கத் தன் தலையை அறுத்துத் தானமாக வழங்கச் சபதம் மேற்கொண்டான். இதன் பின் சில காலத்தில் அம்மண்டபம் குறைவற கட்டி முடிக்கப்பட்டதால் தன் தலையைத் தானே அறுத்துக் கொண்டு மரணம் எய்தினான். அவனது இச்செயலைப் பாராட்டிய இவ்வூர் சபை ஆயிரம் குழி நிலத்தை உதிரப்பட்டியாக வழங்கியது. இவ்வூரில் இன்றும் அவனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் உள்ளது *(ARE No:197/1934-35).* புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்தில் உள்ள காரமங்கலம் கிராமத்தில் உள்ள அகத்தீஸ்வரர் கோயில் மண்டபம் கட்டும் பணியில் ஈடுபட்ட கல்தச்சன் அரங்குளவன் என்பவன் கட்டுமானப் பணியின்போது தவறி வீழ்ந்து பெருங்காயமுற்று மரணமடைந்தான். இவனைச் சிறப்பிக்கும் முகமாக மிழலைக் கூற்றத்து பாம்பாற்று நாட்டுத் தன்ம ஆட்கொண்ட தேவன் என்ற தன்மராயன் என்பவன் அத்தச்சனின் வாரிசுக்கு உதிரப்பட்டி நிலங்களைத் தானம் வழங்கினான் (பாண்டியர் வரலாறு ப:139).

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் பிராமணப் பெண் ஒருத்தி திடீரென்று நஞ்சு அருந்தி மரணம் அடைந்தாள். இம்மரணத்திற்கு அவள் கணவன் சுந்தர பாண்டிய பட்டனே காரணமென்று கூறப்பட்டது. எனவே அவனைப் பல விதத்திலும் ஊர் அவையினர் விசாரித்துத் துன்பமும் மன உளைச்சலும் அளித்தனர். பின்னர் அவன் குற்றமற்றவன் என்பது நிரூபணமாக அவன் அடைந்த மன உளைச்சலுக்குப் பிராயச்சித்தமாய் அவ்வூர் கைக்கோளர்கள் உதிரப்பட்டி நிலத்தை அவனுக்கு வழங்கினர் *(ARE No:171/1935-36).* மேற்சொன்ன ஊருக்கு அருகில் உள்ள சிவபுரியில் சந்தன் கங்கை

கொண்டான் என்ற துவராபதி வேளான் என்பவன் விக்கிரம சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் போரில் வீரமரணம் அடைந்தான். இதற்காக அவன் உறவுகளுக்கு உதிரப்பட்டி நிலம் வழங்கப்பட்டது *(ARE No:47/1928)*.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் உள்ள திருத்தங்கலைச் சார்ந்த வரதுங்கராம தனிப்புலி கலங்காத கண்ட நாயக்கனின் வழித்தோன்றலான வள்ளி பொம்மன் கலங்காத கண்ட நாயக்கன் என்பவன் ஓர் குதிரையையும் அதன் வீரனையும் கொன்ற வீரச்செயலின் காரணமாய் அவனுக்கு உதிரப்பட்டி நிலங்கள் வழங்கப்பட்டன *(ARE No:577/1928)*. தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ள அச்சுத மங்கலம் மற்றும் சோமநாத மங்கலம் மற்றும் சீதக்க மங்கலம் கிராமங்களுக்கு இடையே சோழப் பேராறு என்னும் ஆற்று நீரைப் பாய்ச்சுவதில் தகராறு ஏற்பட்டுப் பெருங்கலவரம் வெடித்தது. இதில் இராஜராஜப் பேரரையன் என்பவன் வீரமரணம் அடைந்தான். எனவே அவனது மரணத்திற்கு இழப்பீடாக அவனது மகன் எதிரிலாப் பேரரையன் என்பவனுக்கு உதிரப்பட்டி நிலம் வழங்கப்பட்டது *(ARE No:406/1925)*.

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் காடையார் கிராமத்தில் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் நாடியா கவுண்டன் என்பவனின் மகன் கலி தீர்த்தான் என்பவன் போர்க்களத்தில் வீரமரணமடைந்தான். இவனது வீரத்தைப் போற்ற ஏரம் நாயகன் என்பவன் உதிரப்பட்டி நிலத்தை வழங்கினான் *(ARE No:237/1936)*.

**முடிவுரை**

தமிழர்கள் அகத்தே காதலையும் புறத்தே வீரத்தையும் போற்றி வாழ்ந்தவராவர். போரில் மட்டுமல்லாமல் பிறவகை செயல்களிலும் அவர்தம் வீரம் வெளிப்பட்டது. இவ்வகை போர் மறவர்களை அரசர் முதல் சாமானியர் வரை போற்றிப் புரந்தனர். இவ்வாறு வீரமரணம் அடைந்த வீரர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்காது உதிரப் பட்டி என்ற நிலங்களே தானமாக

வழங்கப்பட்டன. பொன்னும் பொருளும் காலத்தால் அழியக்கூடியது என்பதால் காலம் காலமாக அழியாமல் நிலைத்து நிற்கக்கூடிய நிலங்களைத் தானமாக வழங்கிச் சிறப்பித்தனர். தமிழ்நாட்டில் உதிரப்பட்டி நிலங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுகள் ஒரு சிலவேயாகும். ஏராளமான கல்வெட்டுகள் பாதுகாப்பின்றிக் காலவெள்ளத்தில் அழிந்ததால் நம் முன்னோர்கள் செய்த ஏராளமான வீரச்செயல்களும் அதற்காக வழங்கப்பட்ட உதிரப்பட்டி நிலங்கள் பற்றிய;ச் செய்திகளையும் முழுமையாக அறிய முடியாமல் போயிற்று. பழந்தமிழரின் வீரத்திற்குச் சான்றாக நடுகற்கள் என்ற வீரகற்கள் இன்றும் தமிழகம் முழுவதும் உள்ளன. அந்த வகையில் தமிழரின் வீரத்தையும் போர் குணத்தையும் தியாக உணர்வையும் உதிரப்பட்டி நிலங்கள் இன்றளவும் பறைசாற்றி வருகின்றன.

***Abbrevations:***

*ARE – Annual Report of Indian Epigraphy*

**பார்வை நூற்பட்டியல்**


- *Pillai.K.K, (1969), A Social History of The Tamils, Chennai: University of Madras*
- *Pillai.K.K, (2013) History of Tamil Nadu - People And Culture, Chennai, International Institute of Tamil Research*
- *Swaminathan.A, (1991), Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa*
- *Publications*
- *Neelakanta Sastri.K.A, (1935), The Cholas, Chennai: University of Madras*
- *Balasubramanyam.M, (1978), Political and Cultural History of Cholas, Chennai: Tamil Nadu Text Book Society*
- *Sathasiva Pandarathat.T.V, (2008), History of Later Cholas, Chidambaram: Annamalai University*
- *Neelakanta Sastri.K.A,(1929), The Pandiyan Kingdom, London: Luzac & Co*
- *Raman.K.V, (1977), History of Pandiyas, Chennai: Tamil Nadu Text Book Society*
- *Sathasiva Pandarathat.T.V, (1972), History of Pandiyas, Chennai: Saiva Siddhantha Book Publivcation Ltd*
- *Perunkathai, (2012), Chennai: Amutha Nilayam*


shcrpt.edu